**TNTT070024882026**

<u>நீதித்துறை நடுவர் மன்றம் எண்.2, கோவில்பட்டி</u>

முன்னிலை – திருமதி. M. மணி மேகலா, எம்.ஏ., எம்.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.2, கோவில்பட்டி

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 08 ம் நாள் திங்கட்கிழமை

Crl.M.P.No. 724/2026

in

Cr.No. 93/2026

பெரியதுரை, வயது 32/2026,
த/பெ. கருப்பசாமி,
124, கிழக்கு தெரு,
ஈராச்சி,
எட்டையபுரம்,
தூத்துக்குடி மாவட்டம்.

... மனுதாரர்/எதிரி

*/எதிர்/*

அரசுக்காக,
உதவி ஆய்வாளர்
கொப்பம்பட்டி காவல் நிலையம்
நிலைய குற்ற எண். 93/26 ...எதிர்மனுதாரர்/புகார்தாரர்

1.மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. வளன்விணோசிங் அவர்கள் ஆஜராகியும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு

**<u>உத்தரவு</u>**

**<u>மனுதாரர் மனுவின் சுருக்கம்</u>**

2. மனுதாரர்/எதிரி மீது கொப்பம்பட்டி காவல்நிலைய குற்ற எண் 93/26 சட்டப்பிரிவு 303(2) BNS–ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, எதிரி 02.06.2026–ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். மனுதாரர் குற்றமற்றவர். மனுதாரர் சட்டத்தை மதிப்பவர் என்றும், தலைமறைவாக மாட்டார் என்றும், அவரை பிணையில் விடுவிக்க பிணையதாரர்களை வழங்க தயாராக இருப்பதாகவும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**

3. அரசு தரப்பு வழக்கானது, எதிரி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாக எதிரி மீது கொப்பம்பட்டி காவல்நிலைய குற்ற எண் 93/26 சட்டப்பிரிவு 303(2) BNS–ன் கீழ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**<u>ஆட்சேபணையின் சுருக்கம்:</u>**

4. அரசு தரப்பில் 06.06.2026 ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையில், கொப்பம்பட்டி காவல்நிலைய குற்ற எண் 93/26 சட்டப்பிரிவு 303(2) BNS–ன் வழக்கின் எதிரி 02.06.2026 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு கோவில்பட்டி கிளைசிறையில் சிறைவாசியாக இருந்து வருகிறார் என்றும், எதிரியை ஜாமீனில் விடுவித்தால் சாட்சிகளை மிரட்டி கலைக்க

நேரிடும் என்றும், எதிரிக்கு ஜாமீன் வழங்கினால் இதுபோன்ற குற்றச் செயல்களில் தொடர்ந்து ஈடுபடுவார் என்றும், மேலும், இவ்வழக்கு புலன் விசாரணையில் இருப்பதால் எதிரியை பிணையில் விடுவிக்க கடுமையாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

**இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா?**

5. ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது.

6. மனுதாரர்/எதிரி தரப்பில் சட்டப்பிரிவு 480 BNSS –ன் கீழ் மனுதாரர்/எதிரிக்கு பிணை கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிரி தரப்பில் கற்றறிருந்த வழக்கறிஞர் வாதிடும்போது, எதிரிக்கு எதிராக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரியை பிணையில் விடும் பட்சத்தில் நீதிமன்றம் விதிக்கும் எந்தவொரு நிபந்தனைகளையும் ஏற்றுக் கொள்ள தயராக உள்ளார் என்றும், எனவே எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்று வாதிட்டார்.

8. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, குறிப்பாக நீதிமன்ற அடைப்புக்காவல் ஆவணத்தை பரிசீலிக்கும்போது எதிரி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்பதையும், மேலும் வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

9. மேலும், எதிரி கடந்த 02.06.2026 ம் தேதி முதல் நீதிமன்ற அடைப்புக் காவலில் இருந்து வருகிறார்.

10. இருப்பினும், எதிரி மீது மேலே குறிப்பிட்டுள்ளபடி வழக்கு விசாரணையில் இருந்து வருகிறது என்பதாலும், எதிரியை பிணையில் விடுவித்தால் வழக்கு விசாரணைக்கு ஆஜராகமாட்டார் என்பதை கருத்திற்கொண்டும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டும் இந்நீதிமன்றம் இம்மனு அனுமதிக்கப்படதக்கதல்ல என்று தீர்மானித்து இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

//இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் வருடம் ஜீன் மாதம் 08 ம் நாள் திங்கட்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.//

MANIMEGALA

Digitally signed by MANIMEGALA
Date: 2026.06.08 12:27:58 +0530

நீதித்துறை நடுவர் எண்.II
கோவில்பட்டி.